P.R.NO:37 நாள்: 14.12.2017

# பத்திரிகைச் செய்தி

1959-ம் வருடத்திய இந்திய படைக்கலச் சட்டத்திற்குட்பட்டும், அதன் கீழ் ஏற்படுத்தப்பட்டிருக்கும் 1962ம் வருடத்திய விதிகளின்படியும் 2016-ம் வருடத்திய திருத்திய விதிகளின்படியும் வழங்கப்பட்டு, 31.12.2017 முடிய புதுப்பிக்கப்பட்டு, 2018 ஆண்டிற்கு புதுப்பிக்கப்பட வேண்டிய உரிமங்கள் வைத்திருக்கும் உரிமதாரர்களுக்கு கீழ்க்கண்ட தகவல்கள் தெரிவிக்கப்படுகிறது.

தங்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் 31.12.2017 முடிய புதுப்பிக்கப்பட்ட துப்பாக்கி மற்றும் ரிவால்வர், பிஸ்டல் உரிமங்களை 2018-ம் ஆண்டிற்கு புதுப்பிக்கும் பொருட்டு அதற்கான விண்ணப்பங்களை உரிமம் முடிவடையும் தேதிக்கு முன்பு, திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் மாவட்ட நிர்வாக நடுவர், திருநெல்வேலி மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் கூடுதல் மாவட்ட நிர்வாக நடுவர், மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம், திருநெல்வேலி என்ற முகவரிக்கு சமர்ப்பிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும் புதுப்பிக்கும் வகைக்கு உரிய கட்டணத் தொகை "0055 போலீஸ் படைக்கலச் சட்டம் மாநிலம் (0055 –Police Arms Act State Code-0055-00-800 AE 0009)" என்ற தலைப்பின் கீழ் பாரத ஸ்டேட் வங்கிக் கிளையிலோ அல்லது அரசு கருவூலத்திலோ செலுத்தி, விண்ணப்பம் மற்றும் அதன் இரண்டு நகல், அசல் உரிமம் செலுத்துச் சீட்டு (அசல்) மற்றும் ஆதார் நகல் ஆகியவற்றை இணைத்து அனுப்ப வேண்டும். இரண்டு மார்பளவு புகைப்படகளையும் (Passport Size Photos) இணைத்து அனுப்பி வைக்க வேண்டும். விண்ணப்ப படிவத்தில் ரூ.2/- (ரூபாய் இரண்டு மட்டும்) மதிப்புள்ள முத்திரைக் கட்டண வில்லை (Court Fee Stamp) ஒட்டி அனுப்ப வேண்டும்.

படைக்கல உரிமதாரர்களில் திருநெல்வேலி மாநகர எல்லைப் பகுதியில் குடியிருப்பவர்கள் மட்டும் தங்கள் புதுப்பித்தல் மனுவினை மேற்கண்ட ஆவணங்களுடன் திருநெல்வேலி, மாநகர காவல் ஆணையர் அவர்களுக்கு நேரடியாக அனுப்பி வைக்க வேண்டும். தற்போதுள்ள விதிமுறைகளின்படி மாநகர பகுதி படைக்கலன் உரிமங்கள் மாநகர காவல் ஆணையரின் அதிகார வரம்பிற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

**புதுப்பித்தலுக்கான கட்டண விபரம்:-** பிஸ்டல், ரிவால்வர், ரிபிட்டிங் ரைபிள் ரூ.500(3 ஆண்டுகள் -ரூ.1500), ரைபிள் (டிரைபிள் நீங்கலாக) ரூ.500 (3ஆண்டுகள் -ரூ.1500), 22 போர்ரைபிள், ஏர் ரைபிள் மற்றும் தோட்டா துப்பாக்கி (எஸ்.பி.பி.எல்/டி.பி.பி.எல்) ரூ.100(3ஆண்டுகள் -ரூ.300) நிரப்புத் துப்பாக்கி ஏர் கன்வாஸ், ஈட்டி முதலியன (டி.பி.எம்.எல், எஸ்.பி.எம்.எல்) ரூ.100 (3ஆண்டு ரூ.300).

மேற்கண்ட படைக்கல உரிமங்களை 2018, 2019, 2020 ஆகிய மூன்று ஆண்டுகளுக்கும் சேர்த்து புதுப்பித்துக் கொள்ளலாம். அவ்விதம் புதுப்பிக்க மேலே குறிப்பிட்டுள்ள கட்டணத்தை செலுத்த வேண்டும். முகவரி மாற்றம் ஏதும் இருந்தால் அதன் விபரத்துடன் முகவரி மாற்றம் சம்பந்தமான தக்க ஆதாரத்துடன் விண்ணப்பம் செய்து கொள்ள வேண்டும். அசல் உரிம புத்தகத்தில் சம்பந்தப்பட்ட வட்டாட்சியர் மற்றும் காவல் துறையினரிடம் படைக்கலனை காண்பித்து சரிபார்க்கப்பட்டது(Checked )என கையொப்பம் பெற்று சமர்ப்பிக்க வேண்டும்.

புதுப்பிக்கப்பட்ட உரிமங்களை திரும்ப அனுப்புவதற்கு உரிமதாரர்கள் சரியான முகவரி அதாவது கதவு எண், தெருவின் பெயர், கிராமம் அஞ்சலகம் பின்கோடு எண், தாலுகா பெயர் ஆகிய விபரங்களைத் தெளிவாகக் குறிப்பிட்டு தேவையான அஞ்சல்வில்லை ஒட்டிய கவர் ஒன்றினை இணைத்து அனுப்ப வேண்டும். விண்ணப்பத்தோடு, உரிமம், செலான், புகைப்படங்கள் ஆகியவற்றை நூலால் இணைத்து பிரித்து போகாதவண்ணம் அனுப்பி வைக்க வேண்டும். வழங்கப்பட்ட உரிமங்கள் கிழிந்து, சிதைந்து அல்லது உபயோகிக்க முடியாத நிலையில் உள்ள உரிமங்களுக்கு மாற்று நகல் கோரி (Duplicate Licence in Book Form) அதற்குரிய கட்டணம் ரூ.1000/– (ரூபாய் ஆயிரம் மட்டும்) மேற்சொன்ன தலைப்பிலும் மற்றும் ரூ.100/–(ரூபாய் நூறு மட்டும்) 0058 Stationery and Printing Charges என்ற தலைப்பிலும் செலுத்தி அசல் செலுத்துச்சீட்டுடன் தனியாக உரிமதாரர்கள் விண்ணப்பித்துக் கொள்ள வேண்டும். மேலும் புதுப்பித்தல் தொடர்பாக உரிமதாரர்களை நேரடியாக விசாரணைக்கு அழைக்கும் போது தனது படைக்கலனை கொண்டு வர வேண்டும்.

காலங்கடந்து வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. 31.12.2017–க்குள் தங்களது உரிமங்களை புதுப்பித்துக் கொள்ளாதவர்கள், 01.01.2018ம் தேதியன்று தம்மிடம் இருக்கும் படைக்கலனை (ஆயுதங்களை) அருகாமையில் இருக்கும் காவல் நிலையத்தில் அல்லது ஆயுதங்களை பாதுகாக்கும் உரிமம் பெற்ற அரசு கிட்டங்கியில் ஒப்படைத்து விட வேண்டும். தவறினால் மேற்படி உரிமதாரர் மீது படைக்கலச் சட்டம் மற்றும் விதிமுறைகள்படி நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

ஓம்/- சந்தீப் நந்தூரி,
மாவட்ட ஆட்சித்தலைவர்,
திருநெல்வேலி.

/உண்மை நகல்/

வெளியீடு

12/12/2017

மாவட்ட ஆட்சித்தலைவருக்காக,
திருநெல்வேலி.

9/10

செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்
திருநெல்வேலி.

12.12.17